MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only



Printed Matter

மார்ச் 11


## பாதி நோன்பு
## (கோகுல்தா நிறுவுதல்)

To

BOOK POST

If Undeliveried please return to ...
Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165

Santhom Press, Diocese of Marthandam Mob : +91 94-42-469852



# Bulletin
## Diocese of Marthandam
மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்

மார்ச் 25

# மங்கள வாழ்த்துத் திருநாள்

மலர் 23 மார்ச் 2026 இதழ் 03

# Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 07.03.2026 | Saturday | 3.00 pm | MIDS Women's Day | Nadaikavu |
| 08.03.2026 | Sunday | 6.30 am | Holy Mass | Panachamoodu |
| 14.03.2026 | Saturday | 6.00 pm | Celebration | KIMS - Nagercoil |
| 15.03.2026 | Sunday | 4.30 pm | MCYM Annual Plan Inauguration | Unnamalakkadai |
| 16.03.2026 | Monday | 10.00 am | Mar Ephraem College Day | Elavuvilai |
| 19.03.2026 | Thursday | 3.00 pm | UCC Bishop's Meeting | Kottar |
| 21.03.2026 | Sunday | 6.00 pm | Sermon | Vallavilai |
| 24.03.2026 | Tuesday | | TNBC Bishop's Meet | |
| 27.03.2026 | Friday | 11.00 am<br>5.00 pm | Homily<br>Way of the Cross | Nattalam Shrine<br>Erachakulam |







# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்
# Marthandam Diocesan Bulletin

மலர். 23 மார்ச் 2026 இதழ். 03



***Patron***
*His Excellency*
*Most Rev. Vincent Mar Paulos*

***Editor***
*Rev. Fr. Franklin Jose*
*The Chancellor*

***Cover Design***
*Mrs. Uni Kumari B.*

***Printing***
*Santhom Press,*
*Marthandam*

***Published By***
*The Chancellor*
*Diocese of Marthandam*





மலர். 23 பெப்ரவரி 2026 இதழ். 02


**Address :**
Bishop's House,
Diocese of Marthandam,
Marthandam P.O.,
K.K Dist. - 629 165
E-mail:mardiobulletin@gmail.com




# The Malankara Syrian Catholic Church
# Bulletin of the
# Diocese of Marthandam




மலர்.23 மார்ச் 2026 இதழ்.03

## முக்கியமான நாட்கள்

மார்ச் 2026

| | |
|---|---|
| 01 | உலக குடிமைப் பாதுகாப்பு தினம் |
| 03 | உலக வனவிலங்கு தினம் |
| 04 | தேசிய இலக்கண தினம் |
| 08 | சர்வதேச மகளிர் தினம் |
| 14 | சர்வதேச நதிகள் பாதுகாப்பு தினம் |
| 15 | உலக நுகர்வோர் உரிமைகள் தினம் |
| 16 | தேசிய தடுப்பூசி தினம் |
| 20 | சர்வதேச மகிழ்ச்சி தினம்<br>உலக சிட்டுக்குருவிகள் தினம் |
| 21 | உலக கவிதை தினம் |
| 22 | உலக தண்ணீர் தினம் |
| 23 | உலக வானிலை தினம் |
| 24 | உலக காசநோய் தினம் |
| 25 | சர்வதேச பிறக்காத குழந்தை தினம் |
| 27 | உலக நாடக தினம் |
| 28 | உலக பியானோ தினம் |
| 31 | ஈபிள் கோபுரம் தினம் |

## உள்ளடக்கம்

1. Circular 03
2. இளங்குருமடச் செய்திகள் 12
3. குருக்களின் வருடாந்திர தியானம் 13
4. மறைபரப்பு தளச்செய்திகள் 13
5. மேரி மக்கள் துறவற சபை 14
6. DSS கன்னியர் இல்லம் அர்ச்சித்தல் 15
7. MIDS 16
8. MCA 18
9. பெயர்விழா நல்வாழ்த்துக்கள் 20
10. MCYM 21
11. தாய்மார் சங்கம் (MCMF) 22
12. திருமண ஆயத்தப்பயிற்சி 22
13. மலங்கரை கத்தோலிக்க கல்லூரி, மரியகிரி 23
14. Health for One Million (Hom) 24
15. மறைவட்ட செய்திகள் 25
16. ஆயரின் பெப்ருவரி மாத நிகழ்வுகள் 29
17. இம்மாதம் நினைவு கூர 31
18. Bishop's Diary 32

*Printed by*
Santhom Press, Diocese of Marthandam. Mob : +91 94-42-469852



**Most Rev.Vincent Mar Paulos**
Bishop of Marthandam

Bishop's House
Marthandam
K.K.Dist - 629 165

Cir. No. 1/2026

04.03.2026

## CIRCULAR

***அன்பான அருட்தந்தையர்களே, இருபால் துறவிகளே, இறைமக்களே!***

அன்பானவர்களே, கிறிஸ்தவ வாழ்வின் சிறப்புக் காலம் தவக்காலம். பல புதுமைகளை நடத்தி நம்மை புரட்டிப் போடும் காலம். மலங்கரை திருச்சபையின் 50 நோன்பு நம்மை ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்புத் திருவிழாவுக்கு ஆயத்தமாக்குகிறது. இந்த தவக்காலம் மனவருத்தத்தை தூண்டி மனமாற்றத்திற்கு இட்டுச் செல்கிறது. சுயநிலை ஆய்வு மனவருத்தத்திற்கும், ஒப்புரவு அருளடையாளம் மனம் திரும்புதலுக்கும் இட்டுச் செல்கிறது. திருவழிபாட்டை அறிந்து அனுபவமாக்கும் இந்த ஆண்டில் ஒப்புரவு அருளடையாளத்தை மிகுந்த முக்கியத்துவத்துடன் பெற்றுக் கொள்வோம். இந்த அருளடையாளம் நமக்கு ஆண்டவரின் மன்னிப்பையும் இரக்கத்தையும் அளவற்ற கருணையையும் அனுபவமாக்கித் தருகிறது. மன்னிப்பு அனுபவம் நம்மை மனமாற்றத்திற்கும் புதுவாழ்விற்கும் இட்டுச் செல்கிறது. பகைமையும், பிரிவினையும், பிளவுகளும், கொடூரச் செயல்களும் மனித குலத்தை நிலைகுலையச் செய்கிறது.

இந்த நோன்பின் இறுதியில் புனித வாரம் கடந்து வருகிறது. ஒரு ஆண்டு வட்டத்தின் அருள்மிகு காலம் இதுவே. இறையனுபவத்தின் காலம் இதுவே. இயேசுவின் புதுமைகள், உவமைகள், சந்திப்புகள், மோதல்கள் இவற்றை உள்வாங்கிய பின் அவரது பாடு, மரணம் ஆகியவற்றை நினைவாக்கம் செய்யும் நாட்கள். மலங்கரை திருவழிபாட்டு செபங்கள் அனைத்தும் விவிலியத்திலுள்ள மீட்பு நிகழ்வுகளையும் அவற்றின் முன்னோடி நிகழ்வுகளையும் உள்ளடக்கமாகக் கொண்டே தரப்பட்டிருக்கின்றன. வேளை செபங்களும் திருச்சடங்குகளும் இயேசுவின் பாடுகளின் பாதையில் நம்மை அழைத்துச் செல்கின்றன. பாவ நீரோடைக்கு தடையணை கட்ட பாடுகளின் தியானத்தை விட சிறந்தது எதுவுமில்லை. பாடுகளின் தியானம் பாவங்களிலிருந்து விலகி இயேசுவுடன் நெருங்கி வர நம்மை தூண்டுகிறது. வாழ்வின் துன்ப துயரங்களை தங்கிக் கொள்ள மனக்கருத்தும் உட்தூண்டுதலும் தருகிறது. இந்த தவக்காலத்தில் இறைவார்த்தை தியானமும், இடைவிடாத செபமும் நமக்கு வலிமை தரட்டும். சிலுவைப்பாதை, கல்வாரிப் பயணம் போன்ற பக்தி முயற்சிகள் இருந்தாலும் திருவழிபாடு சார்ந்த பாதி நோன்பு, நாற்பதாம் வெள்ளி, ஓசானா திருநாள், புனித வார நிகழ்வுகள்



போன்றவற்றிக்கு மிகுந்த முக்கியத்துவம் தரப்பட வேண்டும். குறிப்பாக புனித வெள்ளி திருச்சடங்குகள் இயேசுவின் கல்வாரிப் பயணத்தையும் அவரது பாடு, மரணம், அடக்கம் இவற்றை நினைவாக்கம் செய்யும் வகையில் அனுபவம் ததும்ப வடிவமைக்கப்பட்டுள்ளது. புனித வெள்ளியன்று முழுநேரமும் இயேசுவுடன் இணைந்திருந்து விழித்திருந்து இறைவேண்டல் செய்ய வேண்டும். இயேசுவின் பாடுகளை புனித வெள்ளி திருச்சடங்குகள் நம் உள்ளங்களில் எளிதில் பதிவு செய்கின்றன. இத்திருச்சடங்குகளுடன் இணைந்து போகாத சிலுவைப் பாதையென்னும் பக்தி முயற்சியை அன்றைய தினம் தவிர்ப்பது சாலச் சிறந்தது. மேலும் இத்திருச்சடங்குகள் நிறைவடைய நெடுநேரம் எடுப்பதால் ஆலயத்திற்கு வெளியே சாலைகள் வழியாக நடத்துகின்ற சிலுவைப்பாதை இறைமக்கள் சமூகத்தை சோர்வடையச் செய்து திருச்சடங்குகளில் முழு பக்தியுடன் பங்கேற்க இயலாமல் போகும் சூழலை உருவாக்குகிறது. எனவே புனித வெள்ளியன்று பொது வழிகளில் நடத்தும் சிலுவை பாதைகளை தவிர்த்து ஆலயத்தில் நடைபெறும் திருச்சடங்குகளையும், வேளை செபங்களையும் முன்னிலைப் படுத்தி என்றென்றும் நம்மோடு தங்கும் இயேசுவுடன் ஒருநாள் உடனிருப்பு நடத்துவோம்.

புனித வார சடங்குகளுக்கான புனித வார மன்றாட்டு முறை, திருநாட்களுக்கான புத்தகம் இவற்றை வாங்கி பயன்படுத்தி திருச்சடங்குகளில் மக்களின் செயல்பாட்டு பங்கேற்பை ஊக்குவிக்கும்படி அனைத்து அருட்தந்தையர்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தவக்காலத்தில் திருவழிபாட்டு ஆண்டு திட்டத்தில் தரப்பட்டிருக்கும் வழிகாட்டுதல் படி வீடு சந்தித்தல், ஒப்புரவு அருளடையாளம் நடத்துதல், நோயில்பூசுதல் பொதுவாக நடத்துதல், திருமுழுக்கு நடத்துதல், திருப்பலி முன் திருப்பலிக்கான விளக்கவுரை நடத்துதல் போன்றவற்றிக்கு தனிக்கவனம் செலுத்த வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அனைவருக்கும் அருள்மிகு தவக்காலம் அமையட்டும். ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு பெருவிழாவிற்கு நோன்பாலும் செபத்தாலும், தான தர்மத்தாலும் ஆயத்தமாவோம். இறையாசீர் உங்கள் அனைவரோடும் தங்குவதாக.

இறை ஆசீர் உங்களோடு இறங்கி தங்குவதாக.

***அன்புடன்,***

† **மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ்**
மார்த்தாண்டம் மறைமாவட்டம்



**Most Rev. Vincent Mar Paulos**
Bishop of Marthandam

Bishop's House
Marthandam
K.K.Dist - 629 165

Cir. No. 2/2026

16.03.2026

## CIRCULAR

***அன்பான அருட்தந்தையர்களே, இருபால் துறவிகளே, இறைமக்களே!***

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, திருவழிபாட்டு ஆண்டை சிறப்பித்துக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துகளையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இறைவார்த்தை தியானத்தில் மூழ்கி, நோன்பு, தானதர்மம், இறைவேண்டல் போன்ற ஆன்மீக வாழ்வின் தூண்களை நமதாக்கிக் கொள்ளும் இத்தவக்காலத்தில் உங்கள் அனைவருக்கும் சில அறிவுரைகளை வழங்க விரும்புகிறேன்.

திருவழிபாட்டை அறிந்து அனுபவமாக்குவோம் என்ற முழக்கத்துடன் நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம். குடும்பமாக கிறிஸ்தவ நம்பிக்கையில் வளர பங்குகளில் எடுத்துக் கொள்ளும் முயற்சிகளில் அனைவரும் செயல்பாட்டு பங்கேற்புடன் ஈடுபட்டு இறைஅனுபவத்திற்குள் கடந்து வர அறிவுறுத்துகிறேன். திருவழிபாட்டு ஆண்டு இறையியல் கையேடு எல்லா அருள்வாழ்வியங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அதனை பயன்படுத்தி திருவழிபாட்டை அறிந்து அருள்வாழ்வில் வளர அறிவுறுத்துகிறேன். திருமுழுக்கு, திருப்பலி, ஒப்புரவு, நோயில்பூசுதல் போன்ற அருளடையாளங்களை பொருளுணர்ந்து அனுபவமாக்க திருவழிபாட்டு ஆண்டில் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அவற்றை கடைபிடித்து திருவழிபாட்டை அறிந்து அனுபவமாக்க அறிவுறுத்துகிறேன். குறிப்பாக திருப்பலியின் ஒவ்வொரு அடையாளச் செயல்களும் அதன் அமைப்பும் அறிந்தால் மட்டுமே மீட்பு வரலாறு எப்படி மீள்நினைவாக்கம் செய்யப்படுகின்றது என்பது அனைவருக்கும் தெளிவாகும். நம்முடைய திருவழிபாட்டு வாழ்வை மேம்படுத்த சில வழிகாட்டுதல்களை வழங்க விரும்புகிறேன்.

1. திருத்தூயகம் மிகவும் புனிதமாக பாதுகாக்கப்பட வேண்டும். வாழ்த்துக் கூட்டங்கள், இனிப்பு பண்டங்கள் (Cake) பகிர்தல், திருமணத்திற்குப் பின் கையொப்பம் இடுதல், அறிக்கை வாசித்தல், போன்ற நிகழ்வுகள் கெஸ்துறுமாவில் அல்லது ஹைக்கலாவில் வைத்து நடத்தப்பட வேண்டும்.

2. திருவிழாக்களில் வானவேடிக்கை, திரைஇசை நடனம், DJ நடனம், திரையுலக நிகழ்வுகள் போன்றவை தவிர்க்கப்பட வேண்டும் என்று முன்னர் அறிவித்ததை மீண்டும் வலியுறுத்தி அறிவிக்கின்றேன். வரவேற்பு நிகழ்வுகள் குறிப்பாக ஆரத்தி எடுத்தல் சிறப்பு நிகழ்வுகளின் போது நடத்தினால் போதுமானது. அளவு கடந்த முக்கியத்துவம் ஆரத்தி நிகழ்வுகளுக்கு வழங்கப்படலாகாது. ஆரத்தி திருவழிபாட்டு வரவேற்புக்கு முன்னர் அமைய வேண்டும்.

3. ஆலய திருவிழாக்களில் வீண் ஆடம்பரங்கள் தவிர்க்க வேண்டும். இயற்கை சூழல் மாசு பட்டு, வளங்கள் குறைந்து கொண்டிருக்கும் இத்தருணத்தில் நெகிழிப் பொருட்களும், Flex-களும், பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கின்ற அலங்கார வளைவுகளும் தவிர்க்கப்பட வேண்டும்.

4. இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 30-ம் தேதிக்கு முன் வருடாந்திர கணக்கு நிதி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும். புதிய பங்குப்பேரவை மேய் 31-க்குள் உறுதிமொழி ஏற்று



செயல்பாட்டிற்கு வரவேண்டியதுமாகும். பங்குப்பேரவை தேர்வின் போது ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் போட்டி ஏற்பட்டால் தகுந்த நபரை வாக்குச்சீட்டு முறையில் தேர்வு செய்யவும். பங்கு பேரவை பொருளர், செயலர் தேர்வின் போது போட்டி ஏற்பட்டாலும் வாக்குச்சீட்டு முறையையே பயன்படுத்துதல் வேண்டும். பங்கு பேரவையில் உதவிப்பங்குத்தந்தை, அருட்சகோதரி, உபதேசியார் ஆகியோரை தவிர அனைவருக்கும் வாக்குரிமை உண்டு என்பதை கருத்தில் கொள்ளவும் அறிவுறுத்துகிறேன். ஐந்து அருள்வாழ்வியங்களுக்கு குறைவாக உள்ள பங்குகளில், ஒரு அருள்வாழ்வியத்திலிருந்து 2 நபர்களை பங்குப்பேரவைக்கு உறுப்பினராக தேர்ந்தெடுக்க சிறப்பு அனுமதி வழங்கப்படுகிறது. அதில் ஒருவர் கட்டாயமாக மகளிராக இருக்க வேண்டும்.

5. குருக்கள் பராமரிப்பு நிதி வழங்கி உதவும் உங்கள் அனைவருக்கும் நன்றி. இதுவரை ஒரு குடும்பத்திற்கு ரூ. 20 ஆக இருந்த பராமரிப்பு நிதி வருகிற ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் ரூ. 50 ஆக உயர்த்தி வழங்க தீர்மானம் மறைமாவட்டத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான கலந்தாலோசனைகள் மறைமாவட்ட நிதிக்குழு, மறைமாவட்ட குருக்கள் மன்றம், குருக்களின் பொதுக்குழு மற்றும் மேய்ப்புப் பணி அறிவுரைக் குழு போன்ற தளங்களில் நடத்தப்பட்டு முடிவெடுக்கப்பட்டன.

6. 2026 செப்டம்பர் 20 முதல் இரக்கத்தின் ஆண்டு ஆரம்பமாகும். அதற்கு ஆயத்தமாக ஏழைகளுக்கான நிதியமைப்பு (Poor Fund) இல்லாத பங்குகளில் உடனடியாக நிறுவப்பட வேண்டும்.

7. பங்கில் நடைபெறும் கட்டுமானப்பணிகள், புதுப்பித்தல் அனைத்தும் மறைமாவட்டத்திலிருந்து தகுந்த அனுமதி பெற்ற

பின்னரே நடத்தப்பட வேண்டும். அவற்றை நிறைவு செய்த பின் அதனுடைய கணக்கு விவரம், அர்ச்சிப்புக்கு முன், நிதி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

8. தனிப்பட்ட நோக்கங்களுக்காக சேகரிக்கப்படும் காணிக்கைகள் சேகரித்த ஒரு வாரத்திலேயே நிதி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். திருப்பலி கருத்துக்கள் வழங்குபவர்கள் அதற்கான ரசீதை பெற்றுக்கொள்ள வேண்டும்.

9. மறைமாவட்டத்தினுடைய பொது நிகழ்வுகளுக்கும் பேராலயக் கட்டுமானம் போன்ற பொது முயற்சிகளுக்கும் உங்கள் காணிக்கைகளை மனமுவந்து செலுத்த அறிவுறுத்துகிறேன்.

10. மார் எப்ரேம் தினம் (ஏப்ரல் 8), மறைமாவட்ட தின விழா (ஜூன் 29) போன்ற மறைமாவட்ட நிகழ்வுகளிலும், மார் இவானியோஸ் தினம் (ஜூலை 15), சபை சங்கமம் (செப்டம்பர் 20) போன்ற சபையளவிலான நிகழ்வுகளிலும் இறைமக்கள் முழுமையாக பங்கேற்க வேண்டும்.

11. புதிய மறைபரப்புத் தளங்கள் தொடங்கி செயல்பட்டு வருவது அனைவருக்கும் தெரிந்ததே. புதிய மறைபரப்பு தளங்களை தத்தெடுத்து செயல்பட பெரிய பங்குகள் முன்வர வேண்டும்.

12. மறைக்கல்வி வகுப்புகள் திருப்பலிக்கு முன் அல்லது பின் முறையாக நடத்தப்பட வேண்டும். போட்டிகளுக்கும் மதிப் பெண்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல், நற்செய்தி மதிப்பீடுகளை வாழ்வாக்கும் பொருட்டு மறைக்கல்வி கற்பிக்கப்பட வேண்டும். நம்பிக்கையை கற்பித்தால் மட்டும் போதாது, அதனை வாழ்வாக்கும் பயிற்சிக்கு உட்தூண்டுதல் வழங்குவதாக மறைக்கல்வி அமைய வேண்டும்.



13. தொழிலாளர் பணிக்குழு அலகு எல்லா பங்குகளிலும் உருவாக்கப்பட வேண்டும். அனைத்து பங்குகளிலும் சுற்றுப்புறச் சூழல் குறித்த விழிப்புணர்வு வழங்கும் பொருட்டு Eco Club நிறுவப்பட வேண்டும். மறைமாவட்ட தொழிலாளர் பணிக்குழுவும் சுற்றுப்புறச்சூழல் பணிக்குழுவும் இதற்கான வழிகாட்டுதலை வழங்கும்.

14. பயன்படுத்த இயலாத பழைய விவிலியங்கள், செப புத்தகங்கள், காகிதங்கள் இருந்தால் அவற்றை சேகரிக்க நம்முடைய மறைமாவட்ட MCYM இளைஞர்கள் முன்வந்துள்ளார்கள். சேகரிக்கப்படும் காகிதங்கள் Fiat Mission-க்கு வழங்கப்படும். 5 கிலோ காகிதம் இருந்தால் அதனை மறுசுழற்சிக்கு உட்படுத்தி பிறமொழிகளில் ஒரு விவிலியம் இயேசுவை அறியாதவர்களுக்கு அவர்களால் வழங்கப்படும். அதனுடைய தொடக்கம் MCYM ஆண்டு திட்ட தொடக்கவிழாவில் நடைபெறவுள்ளது. பங்களவில் பங்குதந்தையர்கள் MCYM இளைஞர்களை ஊக்கப்படுத்தி தவக்கால சிறப்பு பணியாக இதனை மேற்கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வழிகாட்டுதல்களை கருத்தில் கொண்டு திருவழிபாட்டு ஆண்டினில் பொருளுணர்ந்து பயணிப்போம். உயிர்த்த ஆண்டவரில் இணைந்து நம்பிக்கையுடன் பணியாற்றுவோம்.

*அன்புடன்,*

**† மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ்**
மார்த்தாண்டம் மறைமாவட்டம்

# இளங்குருமடச் செய்திகள்

- ❖ மார்த்தாண்டம் மறைமாவட்ட அருட்தந்தையர்களின் வருடாந்திர தியானத்தையொட்டி, 2026 பெப்ரவரி 8-ஆம் தேதி அருட்சகோதரர்கள் அனைவரும் விடுமுறை பெற்று தங்களது இல்லங்களுக்குச் சென்றனர். பின்னர், பெப்ரவரி 13-ஆம் தேதி அனைவரும் குருமடத்திற்குத் திரும்பினர். இவ்விடுமுறை அர்த்தமுள்ளதாகவும் பயனுள்ளதாகவும் அமையுமாறு, அருட்தந்தை அஜேஷ் பிரான்சிஸ் (துணை அதிபர் தந்தை) அவர்கள் பல்வேறு பணிப்பொறுப்புக்களை வழங்கினார். அருட்சகோதரர்கள் அனைவரும் அப்பணிகளை மிகச் சிறப்பாக நிறைவேற்றி, மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் குருமடத்திற்குத் திரும்பினர்.
- ❖ குருத்துவ பயிற்சியின் ஒரு பகுதியாக, பெப்ரவரி 14, 2026 அன்று இன்பச் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டது. அருட்சகோதரர்கள் அனைவரும் மிகுந்த உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் இச்சுற்றுலாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.
- ❖ தவக்காலத்தின் தொடக்கமாக, பெப்ரவரி 16, 2026 அன்று அதிர்பர் தந்தையின் தலைமையில் குருமடத்தில் ‘சுபஹோனோ’ திருச்சடங்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது.
- ❖ பெப்ரவரி 21, 2026 அன்று மாதாந்திர தியானம் நடத்தப்பட்டது. இத்தியானத்தை அருட்தந்தை ஜெஸ்டின் அவர்கள் மிக ஆன்மீகமாகவும் ஆழமாகவும் வழிநடத்தினார். இத்தியானத்தில் திருத்தொண்டர்கள், களப்பணியாளர்கள் மற்றும் அருட்சகோதரர்கள் என அனைவரும் பங்கேற்று பயனடைந்தனர். இவ்வாறு, பெப்ரவரி மாதம் இளம் குருமடத்தில் ஆன்மீகமும் சகோதரத்துவமும் நிறைந்ததாக அமைந்திருந்தது. நன்றி.



# குருக்களின் வருடாந்திர தியானம்

மறைமாவட்ட குருக்களுக்கான வருடாந்திர தியானமானது 08.02.2026 அன்று தொடங்கி 13.02.2026 வரை பாறசாலை மறைமாவட்ட மேய்ப்பு பணி அலுவலகத்தில் வைத்து சிறப்பான முறையில் நடைபெற்றது. இவ்வருடாந்திர தியானத்தினை தூத்துக்குடி மறைமாவட்டத்தை சார்ந்த பேரருட்தந்தை குமார ராஜா அவர்கள் வழிநடத்தினார்கள். இவ்வருடாந்திர தியானத்தில் மறைமாவட்டத்தை சார்ந்த அனைத்து குருக்களும் கலந்துகொண்டு தியானித்தார்கள்.

# மறைபரப்பு தளச்செய்திகள்

**தேவதானப்பட்டி மறைபரப்பு தளம்**

- ✶ தூய தைநேசி மாதா மலங்கரை கத்தோலிக்க ஆலயத்தில் தாய்மார்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் புனித தேவசகாயம் டெய்லரிங் யூனிட், மேன்மை தங்கிய ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் 22 பிப்ரவரி அன்று ஆசீர்வதித்து தொடங்கி வைத்தார்.
- ✶ மார்த்தாண்டம் மேரி மக்கள் துறவற சபையின் மாகாண தலைவி அருட்சகோதரி றோஸ் பிரான்சிஸ் மற்றும் செயற்க்குழு உறுப்பினர்கள் 22 பிப்ரவரி அன்று தேவதானப்பட்டி மறைபரப்பு தளத்தை சந்தித்து மாணவர்களோடு கலந்துரையாடினார்கள்.

# மேரி மக்கள் துறவற சபை

மலங்கரை கத்தோலிக்க திருச்சபையில் புதிய ஆயர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ள ஐரோப்பிய நாடுகளின் மலங்கரை கத்தோலிக்க அப்போஸ்தலிக்க ஆயராக நியமனம் செய்யப்பட்டுள்ள மேதகு ஆயர் குரியாகோஸ் மார் ஒத்தாதியோஸ் அவர்களுக்கும் திருவனந்தபுரம் மறைமாநிலத்தின் துணை ஆயராக நியமனம் செய்யப்பட்டுள்ள மேதகு ஆயர் யூஹானோன் மார் அலெக்ஸியோஸ் ஆண்டகை அவர்களுக்கும் மேரி மக்கள் துறவற சபையின் புனித சூசையப்பர் மாகாணத்தின் தாய் இல்லத்தில் சிறப்பு வரவேற்பும் பாராட்டும் அளிக்கப்பட்டது. அவர்களது இறைபணி சிறக்க வாழ்த்துகிறோம்.

மேரி மக்கள் துறவற சமூகத்தை சார்ந்த Rev. Sr. ஜெனெட் மேரி D.M அவர்களுடைய துறவற வாழ்வின் 25 ஆண்டுகள் நிறைவடைந்த வெள்ளி விழாவானது தன்னுடைய சொந்த பங்காகிய மந்தாரம்புதூர் தூய தேவமாதா ஆலயத்தில் வைத்து, 15 .02.2026 அன்று நடைபெற்றது. ஜூபிலி நன்றித் திருப்பலி மறைமாவட்ட செயலர் பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அவர்கள் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக நடைபெற்றது. அதைத் தொடர்ந்து மார்த்தாண்டம் மறைமாவட்ட மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் தலைமையில் ஜூபிலி வாழ்த்துக் கூட்டம் நடைபெற்றது. மேதகு ஆயர் அவர்கள் இந்த பங்கில் உள்ள அனுபவத்தைக் கூறியும், துறவற வாழ்வின் மேன்மையும் எடுத்துக் கூறி வாழ்த்துகளை தெரிவித்தார்கள். தொடர்ந்து மாகாணத்தலைவி ரோஸ் பிரான்சிஸ் DM அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள். வெள்ளிவிழா நாயகி Sr. ஜெனட் மேரி அவர்கள் ஏற்புரை வழங்கினார்கள். நாகர்கோயில் மறைவட்டத்தில் பணியாற்றிய அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள், உறவினர்கள், பங்கு மக்கள் மற்றும் நண்பர்களும் பங்கெடுத்து விழாவை சிறப்பித்தார்கள். அன்பு விருந்துடன் விழா நிறைவுற்றது. பங்கு தந்தையுடன் இணைந்து பங்கு மக்களும் குடும்பத்தினரும் இந்த விழாவை நடத்தினார்கள்.

## Eucharistic Ministry

Eucharistic Ministry என்னும் சிறப்பு பணிக்கான வகுப்பில் மார்த்தாண்டம் மாகாணத்திலிருந்து 19 அருள் சகோதரிகள் கலந்து கொண்டு அந்தப் பணிக்கான அனுமதியும் ஆசீர்வாதமும் மோறோன் மார் பெசலியோஸ் காதோலிக்க பாபா அவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டனர்.

## D.S.S கன்னியர் இல்லம் அர்ச்சித்தல்

மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் 18.02.2026 அன்று சூசைபுரத்தில் புதிதாக கட்டப்பட்ட D.S.S கன்னியர் இல்ல கட்டிடத்தை அர்ச்சித்தார்.

# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

### மரியன் இயக்கம் – கடன் உதவி வழங்குதல்

மிட்ஸ் நிறுவனத்தில் செயல்பட்டு வரும் மரியன் இயக்கமானது மிட்ஸ் பணிமண்டலங்களுக்குட்பட்ட கைம்பெண்களை ஒருங்கிணைத்து அவர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் மற்றும் கடன் உதவிகள் வழங்கி வருகிறது. 25.02.2026 அன்று இந்த கைம்பெண்களுக்கு வட்டியில்லா கடன் உதவி வழங்கும் நிகழ்வானது நடைபெற்றது. திருமதி அபிஷா அஷ்வின் அவர்கள் பெண்களின் முன்னேற்றம் குறித்து ஒரு மணி நேர கருத்தரங்கு நடத்தினார்கள். தொடர்ந்து பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அவர்கள் தலைமையில் கடன் உதவி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம், திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் ஆகியோர் வாழ்த்துரை வழங்கி பயனாளிகளை ஊக்குவித்தார்கள். தொடர்ந்து பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அவர்கள் பயனாளிகளை வாழ்த்தி கடன் உதவிக்கான காசோலைகளை வழங்கினார்கள். மொத்தம் 103 பயனாளிகளுக்கு பல்வேறு சிறுதொழில்கள் செய்ய மொத்தம் 20,60,000/- கடன் உதவி வழங்கப்பட்டது.

### உதவித்திட்டங்கள்

1. 06.02.2026 அன்று மதுரை பணிமண்டலத்தில் செயல்பட்டு வரும் 9 சுய உதவி குழுக்களில் உள்ள 136 உறுப்பினர்களுக்கு ரூபாய் 27,20,000/- கடன் உதவி வழங்கப்பட்டது.



2. 07.02.2026 அன்று All for Life மற்றும் Forderverein திட்டத்தின் கீழ் பயன்பெறும் 23 பயனாளிகளுக்கு சிறப்பு உதவித்தொகையாக ரூபாய் 1,36,880/- வழங்கப்பட்டது.

### பிற நிகழ்வுகள்

1. 14.02.2026 அன்று மிட்ஸ் தளிர்கள் உலகம் திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகளுக்கான சிறப்பு வகுப்புகள் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. தாய்மார்களுக்கு செல்வி தாரணி அவர்களால் சமூக ஊடகங்கள் குறித்த விழிப்புணர்வு பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த பயிற்சிகளில் 48 மாணவ மாணவிகளும், 33 பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.
2. 05.02.2026 அன்று ஆற்றூர் டிவைன் மெர்சி அரங்கத்தில் வைத்து சமூக வளர்ச்சி திட்டங்கள் குறித்த கருத்தரங்கு நடத்தப்பட்டது. NIIT Foundation -ல் இருந்து செல்வி தாரணி மற்றும் செல்வி மார்ட்டினா ஆகியோர் வருகை தந்து மத்திய மற்றும் மாநில அரசுகளின் நலத்திட்டங்களும் அவற்றை பெறும் வழிமுறைகளும் குறித்து விளக்கமளித்தார்கள். இந்த நிகழ்வில் மிட்ஸ் பயனாளிகள், சுய உதவி குழு உறுப்பினர்கள் என மொத்த 44 பேர் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இதே நிகழ்வு 12.02.2026 அன்று நடைக்காவு ஆலய வளாகத்திலும் நடைபெற்றது. இந்த நிகழ்வில் 53 பேர் கலந்து கொண்டனர்.
3. 22.02.2026 அன்று தளிர்கள் உலகம் மாணவர்களுக்கான அறிவுத் திறன் தேர்வு மிட்ஸ் அலுவலகம், மரியகிரி, நாகர்கோவில் மற்றும் ஆற்றூர் ஆகிய பகுதிகளில் வைத்து நடத்தப்பட்டது. இந்த தேர்வினை 104 மாணவ மாணவிகள் எழுதினர்.

# MCA

## Diocese of Marthandam

### மேலாண்மைக் குழு கூட்டம்

மார்த்தாண்டம் மறைமாவட்ட மலங்கரை கத்தோலிக்க இயக்கத்தின் மேலாண்மை குழு கூட்டம் 15.02.2026 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில் உள்ள MCA அலுவலகத்தில் ஆன்மீக இயக்குனர் முன்னிலையில் மறைமாவட்ட தலைவர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கீழ்கண்டவை செயல்படுத்த தீர்மானிக்கப்படது.

**(i) முதல் ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் நினைவு தின விழா போட்டி**

மார்த்தாண்டம் மறைமாவட்ட முதல் ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் நினைவு நாள் ஏப்ரல் மாதம் நடைபெறுவதை முன்னிட்டு 22.03.2026 அன்று பிற்பகல் 2.30 மணி முதல் 4.30 மணி வரை வினாடிவினா போட்டி குழித்துறை மார் இவானியோஸ் சி.பி.எஸ்.சி பள்ளிக்கூடத்தில் வைத்து நடைபெற உள்ளது. மேதகு ஆயரின் வாழ்க்கை குறிப்புகள் தொடர்பான கீழ்ண்ட நூல்கள் வினாடி வினாவில் துணையாக இருக்கும்.

1. தென்னகத்தின் விடிவெள்ளி
2. ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம்
3. ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் பன்முக ஆளுமையின் அடையாளம்
4. மார்த்தாண்டத்தின் மாமேதை

**(ii) 29–வது நினைவு நாள் பாதயாத்திரை**

நினைவில் வாழும் ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் 29-வது நினைவுநாளை முன்னிட்டு, வருடம்தோறும் நடத்தப்பட்டு வரும் நினைவு நாள் பாதயாத்திரை ஏப்ரல் மாதம் 7-ம் தேதி செவ்வாய்கிழமை காலை 6.30 மணிக்கு திருப்பலியுடன் அவரது சொந்த பங்கான



வெள்ளெலும்பு ஆலயத்திலிருந்து ஆரம்பித்து, வாகனங்களில் பின்குளம் ஆலயம் வந்தடையும். அங்கு தூப மன்றாட்டு நடத்தப்பட்டு பாதயாத்திரையாக மார்த்தாண்டம் பேராலய வளாகத்தில் அவரது கல்லறை அமைந்துள்ள இடத்தில் தூப மன்றாட்டுடன் நிறைவடையும்.

### கொல்லங்கோடு மறைவட்டம் சார்பாக திருவிவிலிய கைபிரதி வெளியிடுதல்

மார்த்தாண்டம் மறைமாவட்டம் கொல்லங்கோடு மறைவட்ட MCA சார்பாக இறைவார்த்தை ஆண்டை முன்னிட்டு திருவிவிலியம் கைகளால் எழுதும் நிகழ்வு 2025-ம் ஆண்டு ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்டு, கொல்லங்கோடு மறைவட்டத்தை சார்ந்த 13 ஆலயங்களிலிருந்தும் 73 நபர்கள் கலந்து கொண்டு எழுதி முடிக்கப்பட்டு, அதன் வெளியீட்டு விழா மற்றும் எழுதியவர்களை கௌரவிக்கும் விழா 22.02.2026 அன்று ஊரம்புவிளை ஆலயத்தில் வைத்து மேதகு ஆயர் தலைமையில் நடைபெற்றது. மேதகு ஆயர் டாக்டர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் திருவிவிலியத்தை அர்ச்சித்து திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்வில் கொல்லங்கோடு மறைவட்ட முதன்மைகுரு அருட்தந்தை ஜோஸ் மற்றும் மார்த்தாண்டம் மறைமாவட்ட MCA தலைவர் திரு. வர்க்கீஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். MCA மறைவட்ட இயக்குனர் அருட்தந்தை ஷிஜூ ஜோஸ் சிறப்புரை ஆற்றினார். கொல்லங்கோடு மறைவட்ட MCA தலைவர் பால்ராஜ் தலைமை உரை ஆற்றினார். செயலர் திரு. எட்வர்ட் ஜாண் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். கைபிரதி எழுதிய 73 நபர்களுக்கும் மேதகு ஆயர் அவர்களால் கௌரவித்து, நினைவு பரிசும் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை பொருளர் திரு. சுனில்குமார் மற்றும் ஊரம்புவிளை பங்கு MCA பொறுப்பாளர்கள் மேற்கொண்டார்கள்.

# பெயர்விழா நல்வாழ்த்துகள்



அருட்தந்தை ஆல்பின்
மார்ச் 01



பேரருட்தந்தை ஜோசப் சுந்தரம்
மார்ச் 19



பேரருட்தந்தை ஜோஸ் பிறைட்
மார்ச் 19



பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ்
மார்ச் 19



அருட்தந்தை
ஜோஸ்
மார்ச் 19



அருட்தந்தை
ஜோஸ்பின் ராஜ்
மார்ச் 19



அருட்தந்தை
ஜோஸ் பென்னட்
மார்ச் 19



அருட்தந்தை
ஷிஜு ஜோஸ்
மார்ச் 19



அருட்தந்தை
ஜோஸ் பாறவிளை
மார்ச் 19



அருட்தந்தை
ஜோஸ் G
மார்ச் 19



அருட்தந்தை
விபின்ராஜ்
மார்ச் 19





* **Global Meet** (01/02/2026) : SPARC Pastrol Center விழிஞ்ஞத்தில் வைத்து நடைபெற்ற மலங்கரை கத்தோலிக்க சபையளவிலான Global Meet - ல் எமது மறைமாவட்டத்தில் இருந்து பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.
* எமது மறைமாவட்டத்தின் ஓராண்டு கால ஆண்டறிக்கையானது செயலரால் சமர்ப்பிக்கப்பட்டது. மேலும் எமது மறைமாவட்டத்தை சார்ந்த ஜோஸ் மில்டன் மலங்கரை கத்தோலிக்க சபை அளவிலான செயலராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
* **செயற்குழு கூட்டம்** (15/02/2026) மார்த்தாண்டம் மறைமாவட்ட மலங்கரை கத்தோலிக்க இளையோர் இயக்க செயற்குழு கூட்டமானது 15/02/2026 அன்று மறைமாவட்ட MCYM அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இதில் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து இந்த வருடத்திற்கான ஓராண்டு திட்டத்தை குறித்து தங்கள் கருத்துக்களை பரிமாறி 2026 -ஆம் ஆண்டிற்கான ஓராண்டு திட்டம் வகுக்கப்பட்டது.
* **Unit Visit** (22/02/2026) எமது மறை மாவட்ட பொறுப்பாளர்கள் அனைவரும் இணைந்து அழகியமண்டபம் மறைவட்டத்தை சார்ந்த ஆழ்வார்கோயில் மற்றும் செல்லங்கோணம் அலகுகளை பார்வையிட்டனர். மேலும் அலகு இளையோர்கள் தங்களுக்கான தேவைகளை குறித்தும் தாங்கள் எதிர்கொண்டு வரும் சவால்களை குறித்தும் மறைமாவட்ட பொறுப்பாளர்களிடம் கலந்துரையாடினர்.

## தாய்மார் சங்கம் (MCMF)

❖ 15.02.2026 அன்று மாலை 3 மணியளவில் இறைவணக்கப் பாடலுடன் MCMF கூட்டம் துவங்கப்பட்டது. தாய்மார் சங்க இயக்குநர் அருட்சகோதரி சகோதரி ஷீபா ஜாண் அவர்கள் வரவேற்புரை வழங்கினர். அதனைத் தொடர்ந்து மறைமாவட்ட பொறுப்பாளர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர். MCMF அமைப்பின் வருடாந்திர செயல் திட்டம் மேதகு ஆயர் அவர்களால் வெளியிடப்பட்டது தொடர்ந்து மதிப்பிற்குரிய மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் அவர்கள் தலைமை உரையாற்றி அனைவரையும் ஊக்குவித்தார். இறுதியாக நன்றியுரை வழங்கப்பட்டு, அனைவரும் இணைந்து MCMF கீதம் பாடிய பின்னர் ஆயர் அவர்கள் ஆசீர்வாதம் வழங்கக் கூட்டம் நிறைவடைந்தது.

### திருமண ஆயத்தப்பயிற்சி

**2026 மார்ச்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் **20, 21** ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.



## மலங்கரை கத்தோலிக்க கல்லூரி மரியகிரி

மலங்கரை கத்தோலிக்க கல்லூரியில் 2026-ம் ஆண்டு பட்டமளிப்பு விழா மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக துணை வேந்தர் மாண்புமிகு முனைவர் சந்திரசேகர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 347 மாணவர்கள் பல்வேறு பாடப்பிரிவுகளில் தங்களது பட்டங்களை பெற்றுக் கொண்டார்கள். மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் அடிகளார் அவர்கள் ஆசியுரை வழங்கினார்கள்.

கல்லூரிகளுக்கு இடையேயான கலைப்போட்டிகள் மலங்கரை கத்தோலிக்க கல்லூரி வளாகத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இதில் மார் எஃரேம் பொறியியல் கல்லூரி இலவுவிளை முதல் இடமும் நேசமணி மெம்மோரியல் கிறிஸ்டியன் கல்லூரி மார்த்தாண்டம் இரண்டாவது இடமும் பெற்றுக்கொண்டனர். 17 கல்லூரிகளிலிருந்து மாணவர்கள் இப் போட்டிகளில் பங்கேற்றனர். கலை விழாவின் நிறைவில் மார்த்தாண்டம் மறைமாவட்ட முதன்மை குரு மோண்சிங்னோர் ஜோஸ் பிரைட் அடிகளார் அவர்கள் வாழ்த்துக்கூறி மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்கள்.

மலங்கரை கத்தோலிக்க கல்லூரியின் 28-வது கலை விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினராக பின்னணி பாடகர் காயத்ரி நாயர் கலந்து கொண்டு மாணவர்களை உற்சாகப்படுத்தினார்கள். மேலும் 31 விதமான போட்டிகள் நடைபெற்றது. பெரும்பான்மையான மாணவர்கள் கலை விழாவில் பங்கேற்று தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்தினார்கள்.

மலங்கரை கத்தோலிக்க கல்லூரியின் 28-வது ஆண்டு விழா மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சன்ட் மார் பவுலோஸ் அடிகளார் தலைமையில் இனிதே நடைபெற்றது. விழாவில் கல்லூரியின் முன்னாள் மாணவர் அஞ்சித் நாயர் ஐ. பி. எஸ். அவர்கள் வருகை தந்து சிறப்பித்தார்கள். மேலும் மார்த்தாண்ட மேரி மக்கள் கன்னியர் சமூக மாகாண தலைவி Mother ரோஸ் பிரான்சிஸ் அவர்கள் சிறப்புரை கூறினார்கள். பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் ரெக்ஸ் நாராயண பிள்ளை வாழ்த்துரை வழங்கினார்கள். விழாவில் நான்கு பாடங்களில் முதல் தரவரிசை தங்கப் பதக்க வெற்றியாளர்கள் மற்றும் 42 பிற தரவரிசை பெற்ற மாணவர்களை பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. மேலும் 12 முனைவர் பட்டம் பெற்ற ஆராய்ச்சியாளர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.

## HEALTH FOR ONE MILLION (HOM)
### Diocese of Marthandam

- ❖ HOM சுயஉதவிக் குழு அமைப்பாளர்களின் மதாந்திர கூட்டம் 04.02.2026 அன்று HOM இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் தலைமையில் HOM அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. HOM பணியாளர்கள் மற்றும் அமைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.
- ❖ பெப்ருவரி 24–ம் தியதி HOM சுயஉதவிக் குழு பொருளாதார மேம்பாட்டிற்கான ஜெபமாலை உருவாக்கும் பயிற்சி HOM அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. அருட்சகோதரி ஐஸ்வர்யா அவர்கள் பயிற்சியளித்தார்கள்.



# மறைவட்ட செய்திகள்

## மார்த்தாண்டம் மறைவட்டம்

❖ மார்த்தாண்டம் மறைவட்டத்தில் திருவழிபாட்டு ஆண்டை முன்னிட்டு மூன்று மண்டலங்களிலும் திருப்பலி விளக்கமும் திருவிவிலிய பின்னணியும் என்ற தலைப்பில் வகுப்புகள் நடைப்பெற்றன. மூன்று மண்டலங்களிலும் சேர்த்து சுமார் 250 நபர்கள் பங்கெடுத்தார்கள். இந்த திருவழிபாட்டு ஆண்டில் திருப்பலியைப்பற்றி ஆழமாக அறிய இது ஒரு வாய்ப்பாக அமைந்தது. இதனை வகுப்புகள் எடுத்து வழிநடத்திய அருட்தந்தையர்களுக்கும், பங்கேற்ற அத்தனை நபர்களுக்கும் நன்றிகள்.

## குலசேகரம் மறைவட்டம்

❖ குலசேகரம் மறைவட்ட தொழிலாளர் நலப்பணிக்குழு கூடுகையானது 01.03.2026 ஞாயிற்றுக்கிழமை செருப்பாலூர் பங்கில் வைத்து பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றது. இக்கூடுகையில் மார்த்தாண்டம் மறைமாவட்ட இயக்குனர் பேரருட்தந்தை ஜாண் குமார், குலசேகரம் மறைவட்ட இயக்குனர் அருட்தந்தை ஜெரோம் காட்வின், தமிழ்நாடு மாநில தொழிலாளர் பணிக்குழு தலைவர் திரு. பால்ராஜ், தென் மண்டல தொழிலாளர் நலப்பணிக்குழு ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் திரு. ஜெயசிங், தொழிலாளர் நல பணிக்குழு புலன்பெயர் ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் திருமதி முத்து மலர், மறைமாவட்ட தொழிலாளர் நல பணிக்குழு பொருளாளர் திரு. ராபின்சன் மற்றும் மறைவட்ட பங்குகளில் இருந்து பல்வேறு உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். புதிய மறைவட்ட பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள்.

தலைவர் : திரு. சில்வான்ஸ் (Muthalar)

துணை தலைவர் : திரு. ஜார்ஜ் (Charoor)

செயலர் : திருமதி : ஐடா ஹெலன் (Cheruppaloor)

துணை செயலர் : திரு. பேபி (Shivalogam)

பொருளர் : திரு. ரமேஷ் (Zero Point)

**உறுப்பினர்கள் :**

1. மாத்தார் : திருமதி. காயத்ரி
2. செருப்பாலூர் : திரு. டைட்டஸ்
3. சாரூர் : திரு. இயேசுதாஸ்
4. முக்கம்பாலை : திருமதி. செல்வி
5. பேச்சிப்பாறை: திரு. ஷாஜி
6. பெருவழிக்கடவு : திருமதி. லதா
7. சிவலோகம் : திருமதி லைலா
8. கணபதிக்கல் : திரு. சந்திரன்
9. அணக்கரை : திரு. லெனின் சேவியர்
10. முதலார் : திரு. சில்வான்ஸ்
11. வேர்கிளம்பி : திருமதி ஜான்சி
12. அன்பு நகர் : திருமதி பிரியா
13. சீரோ பாயிண்ட் : திரு. ரமேஷ்

❖ குலசேகரம் மறைவட்ட குருக்கள் கூடுகை 09.03.2026 திங்கட்கிழமையன்று சிவலோகம், கிறிஸ்து அரசர் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. இதில், மறைவட்ட குருக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மாலை 6.30 மணிக்கு மாலை ஜெபம் மற்றும் நற்செய்தி பகிர்வுடன் ஆரம்பமான கூடுகை கலந்தாலோசனை மற்றும் இரவுணவுடன் நிறைவுபெற்றது.

❖ 09.03.2026 அன்று மாலை நடைபெற்ற மறைவட்ட குருக்கள் கூடுகையில் MIDS நிறுவன இயக்குனர் அருள் முனைவர். ஜெரோம் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டு குழந்தைகளின் நலனுக்கான 'விண்ணைத் தொடு' திட்டம் பற்றி வழிகாட்டப்பட்டது.

❖ குலசேகரம் மறைவட்ட மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான திருவழிபாட்டு ஆண்டு பயிற்சி கூட்டமானது மாத்தார் புனித சூசையப்பர் ஆலயத்தில் வைத்து மார்ச் மாதம் 15-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2:30 மணி அளவில் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் ஒவ்வொரு பங்குகளிலிருந்தும் மறைக்கல்வி



ஆசிரியர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள். திருப்பலி அதனுடைய முக்கியத்துவம் மற்றும் அருள் அடையாளங்கள் பற்றிய வகுப்புகள் எடுக்கப்பட்டன. இக்கூட்டத்தில் மறைவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ், மறைவட்ட திருவழிபாட்டு ஆண்டு இயக்குனர் அருட்தந்தை ரோபின், அருட்தந்தை ஜெரோம் காட்வின் மற்றும் அருட்சகோதரிகள் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

❖ குலசேகரம் மறைவட்ட தாய்மார் சங்க பொறுப்பாளர்கள் கூட்டமானது மாத்தார் புனித சூசையப்பர் ஆலயத்தில் வைத்து மார்ச் மாதம் 15-ம் தேதி மாலை 4 மணி அளவில் நடத்தப்பட்டது. கூட்டத்தில் மறைவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அவர்கள் தலைமை வகித்தார்கள். மறைவட்ட ஆன்மீக வழிகாட்டி அருள் சகோதரி. ஜெயின் DM அவர்கள் கூட்டத்தை வழிநடத்தினார்கள். ஜனவரி மாதம் தேர்வு செய்யப்பட்ட புதிய பொறுப்பாளர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டு பொறுப்பேற்றுக் கொண்டார்கள். தொடர்ந்து ஜெபம் மற்றும் தேநீருடன் நிகழ்வுகள் இனிதே முடிவடைந்தன.

## நாகர்கோவில் மறைவட்டம்

❖ நாகர்கோவில் மறைவட்ட குருக்களின் மாதாந்திர கூடுகை மற்றும் மார்ச் மாத தியானமானது 09.03.2025 அன்று கிறிஸ்துவிளாகம் ஆலய வளாகத்தில் வைத்து நடைபெற்றது. இம்மாத தியான சிந்தனையாக, நோன்பின் தேவை மற்றும் உணவு பற்றிய தெளிவு ஆகியவை பேரருட்தந்தை ஜான் குமார் அவர்களால் வழங்கப்பட்டது. தொடர்ந்து மறைவட்ட குருக்களின் பணிப்பொறுப்புகளின் அனுபவ பகிர்வு மற்றும் மறைமாவட்ட பொது அறிவிப்புகள் வழங்கப்பட்டது. மிக முக்கியமாக,

**1. திருவழிபாட்டு ஆண்டு**

திருவழிபாட்டு ஆண்டை மையாமாகக் கொண்டு, பங்களவில் ஒழுங்குபடுத்தப்படுகின்ற அனைத்து காரியங்களைக் குறித்தும் தொகுப்பறிக்கையை ஆகஸ்ட் 30 -க்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டது.

இயக்கங்கள் சார்பாகவும் பல நிகழ்வுகள் நடத்த வேண்டும் என்றும், முதற்கட்டமாக பீடச்சிறுவர்களுக்கான ஒரு வகுப்பு நடத்த தீர்மானிக்கப்பட்டது.

**2. மறைவட்ட கன்வென்ஷன்**

மக்களின் ஆன்மீக உணர்வை வலுவூட்டும் வண்ணமாக மறைவட்ட கன்வென்ஷன் ஏப்ரல் மாதம் 17, 18, 19 ஆகிய நாட்களில், பெருவிளை புனித தேவசகாய திருத்தல வளாகத்தில் நடத்தலாம் என தீர்மானிக்கப்பட்டது.

**3. மறைவட்ட மேய்ப்புப் பணி அறிவுரைக்குழு கூடுகை**

2026-ம் ஆண்டின் மறைவட்ட மேய்ப்புப் பணி அறிவுரைக் குழுவின் முதல் கூடுகை, மார்ச் மாதம் 22-ம் நாள் பெருவிளையில் வைத்து நடத்தலாம் என தீர்மானிக்கப்பட்டது.

**4.** ஆராதனை மற்றும் நிர்வாகம் சார்ந்த மறைமாவட்டத்தின் புதிய வழிகாட்டுதல்கள் யாவும் கட்டாயம் கடைபிடிக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டது.

## பனச்சமூடு மறைவட்டம்

❖ பனச்சமூடு மறைவட்ட குருக்கள் கூடுகை 03.03.2026 செவ்வாய்கிழமை , பனச்சமூடு, புனித யோசேப்பு ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. இதில், மறைவட்ட குருக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## ஆயரின் பெப்ருவரி மாத நிகழ்வுகள்



- 1 ➢ திருப்பூரில் திருமுழுக்கு அருளடையாளத்தை நிறைவேற்றி திருப்பலியும் ஒப்புக்கொடுத்து செபித்தார்.
- 2 ➢ மார்த்தாண்டம் பேராலயத்தில் திருமுழுக்கு அருளடையாளத்தை நிறைவேற்றினார்.
- 3-11 ➢ பெங்களூரில் வைத்து நடைபெற்ற இந்திய ஆயர் பேரவையில் கலந்து கொண்டார்.
- 11-13 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்ட குருக்களின் ஆண்டு தியானத்தில் கலந்துகொண்டு அருளுரையாற்றி ஆசீர்வதித்தார்.
- 13 ➢ குளப்பாறை பள்ளிக்கூட ஆண்டுவிழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார்.
- 14 ➢ சுங்கான்கடையில் வைத்து நடைபெற்ற குழித்துறை மறைமாவட்ட அன்பிய மாநாட்டில் கலந்துக்கொண்டார், உரையாற்றினார்.
- 15 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற குமரிமாவட்ட வின்செந்தி கூடுகையில் கலந்துகொண்டு தலைமைதாங்கினார்.

15 ➢ இந்த ஆண்டு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தாய்மார் சங்கம் பொறுப்பாளர்களின் ஏற்பினை நடத்தி ஆசீர்வதித்தார்.

15 ➢ மந்தாரம்புத்தூரில் வைத்து நடைபெற்ற அருட்சகோதரி அவர்களின் ஜூபிலி விழா பொதுக்கூட்டத்திற்கு தலைமைதாங்கினார்.

16 ➢ மரியாகிரி கல்லூரியில் மாணவர்கள் பட்டமளிப்பு விழாவில் கலந்துக்கொண்டு ஆசீர்வதித்தார்.

17 ➢ புனித மரியன்னை உயர் குருமடம் நாலாஞ்சிறையில் வைத்து நடைபெற்ற கலந்துரையரங்கத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

17 ➢ வெட்டுமணி புனித அந்தோணியார் திருத்தலம் பங்கு தேவாலய திருவிழாவில் கலந்துகொண்டு மறையுரையாற்றினார்.

18 ➢ சூசைபுரத்தில் புதிதாக அமைக்கப்பட்ட DSS கன்னியர் இல்லத்தை திறந்து வைத்து அர்ச்சித்தார்.

19 ➢ மரியாகிரி கல்லூரி ஆண்டு விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

22 ➢ தேவதானப்பட்டி மறைபரப்பு தளத்தில் திருப்பலி நிறைவேற்றி புதிதாக அமைக்கப்பட்ட தொழிற்கூடத்தை திறந்து வைத்து ஆசீர்வதித்தார்.

22 ➢ ஊரம்புவிளையில் MCA சார்பாக நடைபெற்ற திருவழிபாட்டு ஆண்டு சிறப்பு கருத்தரங்கில் கலந்துகொண்டார்.

23-27 ➢ மலங்கரை கத்தோலிக்க ஆயர் மாமன்றத்தில் கலந்துகொண்டார்.



# இம்மாதம் நினைவு கூர

மார்ச் 2026

1 – முசறியோ ஞாயிறு
பெரிய நோன்பின் மூன்றாம் ஞாயிறு

5 – மோறான் மார் பசேயோஸ் கிளிமீஸ் காதோக்கோஸ் ஆண்டகை பதவியேற்ற நாள்

8 – கினானைத்தோ ஞாயிறு
பெரிய நோன்பின் நான்காம் ஞாயிறு

11 – பாதி நோன்பு (கோகுல்தா நிறுவுதல்)

13 – மேதகு ஆயர்கள், வின்செண்ட் மார் பவுலோஸ், தோமஸ் மார் அந்தோணியோஸ், சாமுவேல் மார் ஐரேனியூஸ், பிப்போஸ் மார் ஸ்தேபானோஸ் ஆண்டகைகளின் ஆயர் திருநிலைப்பாடு

15 – க்பிப்தோ ஞாயிறு
பெரிய நோன்பின் ஐந்தாம் ஞாயிறு

17 – புனித பேட்ரிக்

18 – எருசலேம் நகர் மார் கூறிலோஸ்
தோமஸ் மார் கூறிலோஸ் ஆண்டகையின் பெயர் விழா

19 – மார் யோசேப்பு

21 – மார் யோவான் கிளிமாக்கூஸ்

22 – சமியோ ஞாயிறு
பெரிய நோன்பின் ஆறாம் ஞாயிறு

25 – மங்கள வாழ்த்துத் திருநாள்

26 – குட்காவு மறைமாவட்டம் உதயம்


27 – நாற்பதாம் வெள்ளி


28 – லாசரை உயிர்ப்பித்த சனிக்கிழமை

29 – குருத்து ஞாயிறு (ஓசானா ஞாயிறு)
சமூக வளர்ச்சி தினம்


30 – திருப்பாடுகளின் திங்கள்

31 – திருப்பாடுகளின் செவ்வாய்

19


25


27


29


## குருக்களின் வருடந்திர தியானம்



## மேரி மக்கள் துறவற சபை



## DSS கன்னியர் இல்லம் அர்ச்சித்தல்



## MIDS



## MCA



## MCYM



## தாய்மார் சங்கம் (MCMF)



## மலங்கரை கத்தோலிக்க கல்லூரி, மரியகிரி



## Health for One Million (HOM)



## மறைவட்ட செய்திகள்

